# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.11 (L.W.17)

| | | | |
|---|---|---|---|
| Name | : Munirajulu | Caste | : BCA |
| Father's Name | : Munaswamy | Calling | : Cultivation |
| Village | : Pengaragunta | Religion | : Hindu |
| Taluk | : Palamaneru | Age | : 49 yrs |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 07.01.2025.

(A1 to A5 present, A6 absent and his absence condoned on filing u/s 317 Cr.P.C. petition)

மேற்படி சாட்சியின் தாய்மொழி தெலுங்கு என்றும், தன்னால் தமிழ், எழுத, படிக்க, பேச தெரியாது என்றும் சொன்னார். ஏற்கனவே CMP.No.35 of 2025 dated 03/01/2025 ன்படி வழக்கில் கண்ட சாட்சிகளை விசாரிக்க மொழிப்பெயர்பாளர் கொண்டு விசாரிக்கவேண்டும் என்று ஏற்கனவே சொன்ன நிலையில் அரசு தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு, அது உத்தரவாகி, அதன் அடிப்படையில் அரசு மேல்நிலைப்பள்ளி, சேர்காடில் உள்ள தெலுங்கு மொழி ஆசிரியர் வி.அமரேந்திரன் அவர்கள் இந்த வழக்கில் தெலுங்கு சாட்சியிடம் மொழி பெயர்க்கும்படி கூறியதின் பேரில் அவர் இன்று ஆஜரானார். அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியிடம் கேட்கும் கேள்விகளை கேட்டு, சாட்சி சொல்லும் பதில்களை கேட்டு, அவர் சொல்லி கீழ்க்கண்டவாறு பதியப்படுகிறது.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு.மகேந்திரவர்மன் அவர்களுக்கு தெலுங்கு மொழி ஓரளவுக்கு தெரியும் என்பதையும் பதியப்படுகிறது.

2 முதல் 5 எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு.ஜி.ரவி அவர்களுக்கு தெலுங்கு மொழி ஓரளவுக்கு தெரியும் என்பதையும் பதியப்படுகிறது.

முதல் விசாரணை

நான் மேற்படி விலாசத்தில் வசிக்கிறேன். நான் தற்போது விவசாயம் செய்கிறேன். நான் ஆந்திரா மாநிலம், சித்தூர் மாவட்டம், பலமனேரி அருகில் பெங்கரகுண்டா கிராமத்தில் வசித்து வருகிறேன். அது என்னுடைய நிரந்தர முகவரி. அ.சா.9 சிவா (எ) சிவசந்திரன் என்னுடைய அக்காவின் மகன் ஆவார். எனக்கு மச்சான் உறவு முறை. சிவாவின் மனைவி பெயர் வீணா. சிவாவிற்கும், வீணாவிற்கும் எங்கள் வீட்டிற்கு தமிழ்நாடு போலிஸ் வந்து சிவாவை அழைத்து செல்வதற்கு 10 நாட்களுக்கு முன்னர் அவர்கள் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. தமிழக போலிசார் வந்தபோது சிவாவும், அவருடைய மனைவியும் எங்கள் வீட்டில் தான் தங்கியிருந்தார்கள்.

18.06.2015 அன்று அதிகாலை 4, 4.15 மணியளவில் தமிழக போலிசார் என் வீட்டிற்கு வந்து, ஏதோ திருட்டு வழக்கு சம்மந்தமாக சிவாவை விசாரிக்கவேண்டும் என்று என்னிடம் இருந்த செல்போனை வாங்கிக்கொண்டார்கள், பின்னர் சிவாவை மட்டும் மேற்படி தமிழக போலிசார் அழைதது சென்றார்கள். சிவா மற்றும் என்னுடைய மொபைல் போன்களை போலிசார் எடுத்து சென்றார்கள். போலிசார் தன்னுடைய போன் நெம்பரை எங்களுக்கு எதுவும் கொடுக்கவில்லை.

அன்று மாலை நான் என்னுடைய கைப்பேசிக்கு தொடர்பு கொண்ட போது காலையில் இருந்து மாலை வரை ஸ்விட்ச் ஆப் செய்யபபட்டு இருந்தது. மாலையில் தான் ரிங் அடித்தது. எடுத்து பேசினார்கள்.

பள்ளிகொண்டா போலிசார் போனை எடுத்து, பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு வந்து சிவா (எ) சிவசந்திரனை அழைத்து செல்லலாம் என்று சொன்னார்கள். அன்று மாலை 7.30 மணிக்கு பலமனேரியில் இருந்து பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு எனக்கு தெரிந்த சத்தியா என்ற ஒருநபரை அழைத்துக் கொண்டு 9 மணிக்குள்ளாக பள்ளிகொண்டா காவல் நிலையத்தின் ஆரம்பத்தில் வந்தோம். பின்னர் அங்கிருந்து சற்று முன்பே இருந்த வேறு கட்டடித்திற்கு அழைத்து சென்றார்கள். அந்த இடம் வீடு மாதிரி இருந்தது.

அந்த இடத்திற்கு நாங்கள் சென்றபோது என்னுடைய மைத்துனர் சிவா (எ) சிவச்சந்திரனும், அவருடன் இன்னொரு நபர் இருந்தார். அவரை பார்த்தால் அடையாளம் காட்ட இயலும். பொது ஜனங்கள் 3 பேர் அந்த இடத்தில் இருந்தார்கள். போலிசார்கள் 3 பேர் இருந்தார்கள். என்னுடைய மைத்துனர் சிவா (எ) சிவசந்திரன் அந்த இடத்தில் இருந்தபோது, சிவாவுடன் இன்னொருத்தர் இருந்தார். சிவாவுடன் அந்த இடத்தில் இருந்த நபரை என்னால் அடையாளம் காட்ட முடியும். போட்டோவை காட்டினால் அடையாளம் காட்ட இயலும். பட்டியல் ஆவண எண்.66 ல் அ.சா.ஆ.13 ஆக குறியிடப்பட்ட ஆவணத்தில் உள்ள ஒளிநகல் போட்டோவை சாட்சியிடம் காட்டி வினவியபோது அந்த போட்டோவில் இருந்த நபர் தான் சிவாவுடன் அந்த பழைய வீட்டில் இருந்தார். அந்த நபர் மௌனமாக இருந்தார். அவர் அப்செட்டாக இருந்தார். அந்த நபருக்கு உடம்பில் காயம் இருந்ததா

என்றால் அவர் தூரமாக இருந்தார், நான் கவனிக்கவில்லை. ஆஜர் எதிரிகள் 1 முதல் 5 எதிரிகளில், சாட்சி பார்த்து அந்த பழைய வீட்டில் 1ம் எதிரி மார்ட்டின் பிரேம்ராஜ், 3ம் எதிரி நாகராஜ், மற்றும் 4ம் எதிரி சபாரத்தினம் அந்த இடத்தில் இருந்ததாகவும், அதை சாட்சி பார்த்ததாகவும் அடையாளம் காட்டினார்.

4ம் எதிரி அப்போது என் மைத்துனர் சிவாவை அழைத்து செல்லலாம் என்றும், அதற்காக எழுதிக்கொடுத்து அழைத்து செல்ல சொன்னார். அதன்பின்னர் என்னிடம் கையொப்பம் வாங்கிவிட்டு, என் மைத்துனர் சிவாவை என்னுடன் அழைத்து போக சொன்னார். நான் கையெழுத்து போட்டுவிட்டு அழைத்து சென்றேன். மேற்படி நான் போலிசாரிடம் எழுதிக்கொடுத்த ஆவணம் அ.சா.ஆ.17 ஆகும். நான் கையொப்பம் போட்ட பின்னர் என்னுடைய உறவினர் சத்தியா அந்த ஆவணத்தில் கையெழுத்து போட்டார். அந்த ஆவணத்தில் என்னுடைய தொலைபேசி எண்ணை குறித்துள்ளேன். என்னுடைய தொலைபேசி எண்.8790577314 ஆகும்.

பின்னர் 3 மாதம் கழித்து சித்தூர் மாவட்டத்தில் உள்ள பலமனேரி காவல் நிலையத்தில், தமிழ்நாடு போலிசார் வந்து என்னை விசாரிக்க அங்கு வரச்சொன்னார்கள். நான் அங்கு சென்றேன். ஏதோ ஒரு பிரச்சனை சம்மந்தமாக விசாரணை செய்யவேண்டும் என்று வரச்சொன்னார்கள். பலமனேரி காவல் நிலையத்திலிருந்து நான் வேலூரில் டிஎஸ்பி சார் விசாரித்தார்கள். தற்போது நான் நீதிமன்றத்தில் சொன்ன சாட்சியத்தை தான் அவரிடம் சொன்னேன். அதை அவர்கள் வாக்குமூலமாக பதிந்தார்கள். அதை எனக்கு படித்துக் காண்பித்தார்கள்.

சரியென்று சொன்னேன். வேலூரில் உள்ள சி.ஐ.டி. போலிசார் விசாரித்தார்கள். நான் கொடுத்த வாக்குமூலத்தை போலிசார் படித்துக் காண்பித்தார்கள், சரியென்று சொன்னேன்.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.மகேந்திரவர்மன் வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

2 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.ரவி வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

Telugu to Tamil Translation
by V.Amarendran,
B.T. Asst. Telugu
G.H.S.S., Serkadu.

Sd/- V.Amarendran

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.07 17:34:15 +0530